**தலைப்பு – 271 திருகோணமலை மாவட்ட செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

திருகோணமலை மாவட்ட செயலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் திருகோணமலை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 27 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகம் தொடர்பான விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 19 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திருகோணமலை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயன்முன்னேற்றம் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக பேணுவதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாவட்ட செயலகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### (அ) வருமானமற்ற பெறுவனவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தின் பரீட்சை மீதி (SA-21) இன் பிரகாரம் ஏனைய வளமூலங்களில் இருந்து பெறப்பட்ட கட்டுநிதி ரூபா 581.65 மில்லியன் ஆக காணப்பட்ட போதிலும் அது கட்டுநிதி கணக்கு கூற்றில் (ACA-3) ரூபா 632.26 மில்லியனாக காட்டப்பட்டுள்ளது. அதற்கிணங்க ரூபா 50.61 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது. | பொது திறைசேரியில் இருந்து பெறப்பட்ட நிதியேற்பாடு SA-70 இன் பிரகாரம் ரூபா 632,264,288 ஆக காணப்பட்டதுடன் இது 2021 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்கில் ACA-03 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரியான கணக்கீட்டு தகவல்கள் பதிவு செய்யப்பட வேண்டும். |

### (ஆ) மீண்டெழும் செலவினம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சிவில் பாதுகாப்பு சேவைக்காக மாவட்ட செயலகத்தால் செலுத்தப்பட்ட ரூபா 4.95 மில்லியன் தொகையானது ஏனைய சேவைகளின் (பிராந்தியம்) கீழ் கணக்கீடு செய்யப்படாத போதிலும் ஏனைய சேவைகளின் (மாவட்ட செயலகம்) கீழ் கணக்கீடு | பிரதேச செயலகங்களுக்கு உரிய செலவினங்களை மேற்கொள்வதற்கு போதிய ஒதுக்கீடுகள் இல்லாத காரணத்தினால் இந்த ஒதுக்கீடுகள் மாற்றப்பட்டுள்ளன. | செலவின விடயம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

செய்யப்பட்டது. இதன் காரணமாக மாவட்டச் செயலகத்தின் ஏனைய சேவைச் செலவினங்கள் அப் பெறுமதியால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

**(இ) மூலதன செலவினம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமில்லாத வாகனம் தொடர்பான திருத்தக் கிரயம் ரூபா 2.05 மில்லியன் வாகன புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுச் செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான வாகனப் பராமரிப்புச் செலவினங்கள் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளன. | உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு செயலாளரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் திருத்தச் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | செலவின விடயம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**(ஈ) கணக்கீட்டு உத்தியோகத்தரின் சான்றுபடுத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையினை செயற்றிறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். மேலும் அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததை | உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

உறுதிப்படுத்தும் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

கணக்காய்வு சோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழ பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | அவதானிப்புக்கள்<br>பெறுமதி | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில் | | | |
| (i) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள்<br><br>நிதிப் பிரமாணம் 208 (2) (அ) | 12.50 | மீளாய்வாண்டிற்கான மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றின் பிரகாரம் கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருள் கைத்தொழில் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சினால் அமுல்ப்படுத்தப்பட்ட வீடமைப்பு செயற்திட்டத்திற்காக ரூபா 587.01 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. இதில் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் அமுல்ப்படுத்தப்பட்ட மேற்படி நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புடைய செலவினங்களாக ரூபா 574 மில்லியன் கழிக்கப்பட்டுள்ளது, தேறிய நிதியேற்பாடு ரூபா 574.51 மில்லியன் ஆகும். மேலும், கந்தளாய் மற்றும் சேருவில பிரதேச செயலகங்களின் கீழ் வீடுகளை நிர்மாணிப்பதற்காக இந்தப் பிரிவிற்கு முரணாக விடுவிக்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகையை விஞ்சி ரூபா 12.49 மில்லியன் ரூபா வழங்கப்பட்டிருந்தது. | பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ii) | 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை 2 (iv) ஆம் பந்தி | விடுமுறை கொடுப்பன வாக ரூபா 627,775 மற்றும் மேலதிக நேர கொடுப்பன வாக ரூபா 574,343. | கிண்ணியா மற்றும் தம்பலகமுவ பிரதேச செயலகங்கள் கைவிரல் அடையாள இயந்திரத்தின் ஊடாக வருகை மற்றும் புறப்படுதலை சரிபார்க்காமல் விடுமுறை கொடுப்பனவு மற்றும் மேலதிக நேர கொடுப்பனவுகளை செலுத்தியிருந்தன. | வருகை/புறப்படுதல் பதிவேட்டில் உறுதிப்படுத்தி தொடர்புடைய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | சுற்றறிக்கை யுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் 6/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.3 ஆம் பந்தி | | கர்ப்பிணித் தாய்மார்களுக்கான பொருட்களை கொள்வனவு செய்வதற்கு பதிவுசெய்யப்பட்ட வர்த்தக நிலையங்கள் தொடர்பில் அவதானித்து அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் தம்பலகமுவ பிரதேச செயலகத்தினால் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதனை தொடர்ந்து கண்காணிப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (iv) | சமூக சேவைகள், நலன்புரி மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சின் எம்எஸ்எஸ்/ஏடிஎம்/ 10/2/10 ஆம் இலக்க சுற்றறிக்கை 2.5 மற்றும் 2.6 ஆம் பந்தி | | தம்பலகமுவ பிரதேச செயலகத்தின் முதியோர் கொடுப்பனவுப் பயனாளிகளில் மீளாய்வாண்டின் போது இறந்த 25 பேரின் இரத்துச் செய்யப்பட்ட சான்றிதழ்கள் பிரதேச செயலாளரால் கட்டுக்காப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக கிராம உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (v) | 2018 யூலை 20 ஆம் திகதிய 01/2018 ஆம் இலக்க ஓய்வூதிய திணைக்கள சுற்றறிக்கை 5 (iii) மற்றும் 6 (ஆ) பந்தி. | ரூபா 1.14 மில்லியன் ரூபா 112,850 | மூதூர் பிரதேச செயலகத்தால் இரண்டு வருடங்களுக்கு மேல் வெளிநாடு சென்ற ஒருவருக்கும் இரண்டு ஓய்வூதியதாரர்களுக்கும் 74 மாதங்களுக்கு மாதமொன்றிற்கு ரூபா 3525 வீதம் வாழ்க்கைச் செலவுப் படி செலுத்தப்பட்டிருந்தது. | ஓய்வூதியத் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலதிமாக செலுத்தப்பட்ட ஓய்வூதிய நலன்களை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | -மேற்படி- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (vi) | 2021 மே 17 ஆம் திகதிய கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருள் கைத்தொழில் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் எஸ்எம்ஆர்எச்சீ/ஆர்டி/04/01 ஆம் இலக்க சுற்றறிக்கையில் பயனாளிகளைத் தெரிவுசெய்வதற்கான அளவுகோல்கள் - 2021 மதிப்பெண் திட்டத்தின் 6 ஆம் பந்தி | | யுத்தம் அல்லது அது தொடர்பான காரணங்களால் ஊனமுற்றவர்கள் மீள்குடியேற்ற நிகழ்ச்சித்திட்டத்தில் வீடமைப்புப் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட வேண்டும் எனினும், பல்வேறு இயற்கை காரணங்கள், ஏனைய விபத்துக்கள் மற்றும் நோய்களினால் ஊனமுற்றவர்கள் கிண்ணியா குச்சவெளி, கோமரன்கடவல, சேருவில, கந்தளாய் மற்றும் மொறவெவ பிரதேச செயலகங்களால் பயனாளி குடும்பங்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அதன் பிரகாரம் ரூபா 600,000 வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 11 பயனாளிகளுக்கும், ரூபா 1 மில்லியன் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 16 பயனாளிகளுக்கும் ரூபா 14.40 மில்லியன் தொகையான வீடமைப்பு நன்கொடைகள் வழங்கப்பட்டுள்ளன. | மீள்குடியேற்ற நிகழ்ச்சித்திட்டத்தில் ஊனமுற்றவாகளை வீட்டுப் பயனாளிகளாகத் தெரிவுசெய்வது தொடர்பாக அமைச்சின் கடிதம் எந்த சிறப்பு வழிகாட்டலையும் வழங்கவில்லை. மேலும் பொருத்தமான பயனாளி குடும்பங்கள் பொருத்தமான அளவுகோல்கள் மற்றும் கிராமக் குழு வழிகாட்டல்களின் மூலம் தெரிவுசெய்யப்பட்டனர். | மதிப்பெண் திட்டத்தின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| அடிப்படைத் தகைமைகளின் 03 ஆம் பந்தி | | இக்கட்டான காலபகுதியில் முற்றாக சேதமடைந்த வீடுகளில் வசித்த குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்பட வேண்டிய போதிலும் கிண்ணியா, குச்சவெளி, கோமரன்கடவல, சேருவில, கந்தளாய் மற்றும் மொறவெவ ஆகிய பிரதேச செயலகங்களில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் கோவைகளில் மோதல்களினால் வீடுகள் முற்றாக சேதமடைந்ததா அல்லது யுத்த காலத்தில் நிரந்தர வீடுகள் இருந்ததா என்பதை உறுதிப்படுத்துவதற்கான முறையான ஆவணங்களை இனங்காண முடியவில்லை. மேலும் மேலே குறிப்பிட்டுள்ள அளவுகோல்களுக்கு முரணாக ரூபா 1 மில்லியன் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 62 பயனாளிகளுக்கும், ரூபா 600,000 வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 151 பயனாளிகளுக்கும் மொத்தம் 313 வீடுகளுக்காக ரூபா 252.6 மில்லியன் தொகை வழங்கப்பட்டுள்ளது. | கிராமக் குழு வழிகாட்டல்கள் மற்றும் பயனாளிகளைப் பற்றிய பொருத்தமான அடிப்படை அளவுகோல்கள் மூலம் பொருத்தமான பயனாளி குடும்பங்கள் பரிந்துரை செய்யப்பட்ட பின்னர் பிரதேச செயலாளரால் கள பரீட்சிப்பொன்று நடாத்தப்பட்டு பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். | பயனாளிகளைத் தெரிவுசெய்வதற்கான அளவுகோல் சுற்றறிக்கையில் உள்ள அடிப்படைத் தகைமைகளின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (vii) நிறுவனத்தின் முகாமைத்துவ மற்றும் உள்ளக பணிப்புரைகளுடன் இணங்காமை | | | | |
| மீள்குடியேற்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வீட்டுப் பயனாளிகளாக துணைக் குடும்பங்களைத் தெரிவுசெய்தல் தொடர்பான 2016 செப்தெம்பர் மாத திருகோணமலை மாவட்ட செயலாளரின் ஜீஏரீ/ஈஎஸ்ரீ/ஆர்ஈ எஸ்ஈரீ/எச்ஓயூ/வீஓஎ | ரூபா 56.40 மில்லியன் | மீள்குடியேற்றத்திற்கு முன்னர் திருமணமான குடும்பங்கள் மாத்திரமே மீள்குடியேற்ற நிகழ்ச்சித்திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட வேண்டிய போதிலும் கிண்ணியா, கோமரங்கடவல, சேருவில, கந்தளாய், மொறவெவ ஆகிய பிரதேச செயலகங்களில் மீள்குடியேற்றத்திற்குப் பின்னரான ஆண்டுகளில் திருமணமானவர்கள் தெரிவு செய்யப்பட்டு பயனாளி குடும்பங்களாகக் கருதப்பட்டு | பயனாளிகளைத் தெரிவு செய்தல் தொடர்பாக பிரதேச செயலாளர்களுடன் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் தகுதியானவர்களுக்கு நலன்கள் வழங்கப்பட்டுள்ளன. | மாவட்ட செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ல்II/2016 ஆம் இலக்க கடிதம் | ரூபா 1 மில்லியன் வீடமைப்பு செயற்திட்டத்தின் கீழ் 42 பயனாளிகளுக்கும் ரூபா 600,000 வீடமைப்பு செயற்திட்டத்தின் கீழ் 24 பயனாளிகளுக்கும் என 66 பயனாளிகளுக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன. | |

**(ஊ) முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

**அங்கீகரிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் அங்கீகாரமின்றி மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | சேருவில மற்றும் கோமரங்கடவல பிரதேச செயலகங்களில் குறைந்த வருமானம் உடைய மாற்றுத்திறனாளிகளுக்கு ரூபா 5,000 படியை செலுத்தும் அதே நேரம் உரிய பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கான சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை மீறி, மீளாய்வாண்டில் 2124 சந்தர்ப்பங்களில் 178 நபர்களுக்கு ரூபா 10.62 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள், கிராமக் குழுக்கள் மற்றும் கிராம உத்தியோகாத்தரின் பரிந்துரைகளின் அடிப்படையில் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். | சுற்றறிக்கை ஏற்பாடுகள் மற்றும் நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | கந்தளாய் மற்றும் சேருவில பிரதேச செயலகங்களுக்கு ரூபா 600,000 வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இருபத்தியொரு மேலதிக வீடுகள் 2021 திசெம்பர் 30 ஆம் திகதிய மேலதிக மாவட்ட செயலாளரின் ஜீஏரீ/ஈஎஸ்ரீ/ஆர்ஈஎஸ்ஈரீ/எஸ்எம் எச்சீ/எச்பி/02/2021 ஆம் இலக்க கடிதம் மூலம் வழங்கப்பட்டிருந்தன. மேலும் கட்டுநிதி ஏற்பாடுகள் இல்லாத போது 21 வீடுகளுக்கு ரூபா 150,000 வீதம் முதலாம் தவணைப்பணமாக ரூபா 3.15 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கந்தளாய் பிரதேச செயலகத்திற்கு ரூபா 600,000 வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பதினைந்து மேலதிக வீடுகள் வழங்கப்பட்டு கோரப்பட்ட கட்டுநிதி தொகை பெறப்படாததால் செலுத்த வேண்டிய விலைப்பட்டியல்களாக பதிவுசெய்யப்பட்டது. ள்ளதுடன், அந்த 15 வீடுகளுக்கான முதலாம் தவணைப்பணம் செலுத்தப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாடுகளை கருத்தில் கொண்டு செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக ரூபா 3,959.84 மில்லியன் கட்டுநிதி தொகை கோரப்பட்ட போதிலும், ரூபா 3,171.64 மில்லியன் கட்டுநிதி தொகை மாத்திரமே பெறப்பட்டதால், கோரப்பட்ட தொகைக்கும் பெறப்பட்ட தொகைக்கும் இடையே உள்ள வேறுபாடு ரூபா 788.20 மில்லியன் ஆகும். இதன் விளைவாக, மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 88.49 மில்லியன் தொகை செலுத்த வேண்டிய விலைப்பட்டியல்களாகக் குறிப்பிடப்பட்டது. | கோரப்பட்ட கட்டுநிதி தொகை பெறப்படாததால் செலுத்த வேண்டிய விலைப்பட்டியல்களாக பதிவுசெய்யப்பட்டது. | மாதாந்த செலவினத் தேவைகளை முறையாக இனங்கண்டு அதற்கேற்ப திட்டமிட்டுப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 6 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் ஒரு மூலதனச் செலவின விடயத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 41.72 மில்லியனில் ரூபா 14.29 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 27.44 மில்லியன் மீதமாக இருந்தது. ஒதுக்கீடு 10 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை சேமிக்கப்பட்டதுடன் சேமிப்பிற்கான காரணங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, மீளாய்வாண்டில் 6 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் பதவியணியினர் பயிற்சி செலவின விடயம் என்பவற்றில் அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படாததால் ஒதுக்கீடு அப்படியே இருந்தது. | நிதியேற்பாடுகள் சரியாக திட்டமிடப்பட வேண்டும். |
| (ஆ) | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் மூலம் 14 செலவின விடயங்களின் கீழ் மாவட்ட செயலகத்திற்கு ரூபா 21.25 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 23.05 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 1.80 மில்லியன் அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டை விஞ்சியிருந்தது. மேலும் அது அங்கீகரிக்கப்படாத மிகையாக வெளிப்பட்டிருந்தது. | புதிதாக நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் படிகள் மற்றும் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் சில செலவினங்கள்கள் இதில் உள்ளடங்கியுள்ளன. | அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாட்டை விஞ்சாத வகையில் செலவினங்கள் முகாமை செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டிற்காக கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருள் கைத்தொழில் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சினால் அமுல்ப்படுத்தப்பட்ட வீடமைப்பு செயற்திட்டத்திற்காக திருகோணமலை மாவட்டத்திற்காக விடுவிக்கப்பட்டிருந்த ரூபா 587.01 மில்லியன் தேறிய ஒதுக்கீட்டில் மீளாய்வாண்டின் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட தேறிய செலவினம் ரூபா 495.22 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 91.79 மில்லியன் மீதமாக இருந்தது, 11 பிரதேச செயலகங்களின் கீழ் அமுல்படுத்தப்பட்ட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கான மொத்த வெளிப்படுத்தப்படாத பெறுமதி 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 94.29 மில்லியனாக காணப்பட்டது. மீதமுள்ள நிதியேற்பாடு சமமாக இருக்க வேண்டும். ஆனால் வெளிப்படுத்தப்படாத பெறுமதி மீதமுள்ள நிதியேற்பாட்டை விட ரூபா 2.5 மில்லியன் அதிகமாக இருந்தது. | கட்டுநிதி கிடைக்காததாலும், விலைத் தளம்பல்களாலும் திட்டமிட்டவாறு நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்ய முடியவில்லை. | அரசாங்க ஒதுக்கீடுகள் முறையாக முகாமை செய்யப்பட வேண்டும். |

**2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலகத்திற்கு ஏனைய 15 அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் இருந்து பெறப்பட்ட ரூபா 1,045.75 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் ரூபா 615.42 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 430.34 மில்லியன் மீதமாக இருந்தது. இதன் விளைவாக, இந்த அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் கீழ் அமுல்ப்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்டங்களில் இருந்து அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் மீளாய்வாண்டில் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக கைவிடப்பட வேண்டியிருந்த நடவடிக்கைகள் காரணமாக இந்த நிதியேற்பாடு காணப்பட்டது. | நிதிப் பிரமாண இல. 208 இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) ஏனைய வழங்கல் செலவினங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 25 மில்லியன் குறைநிரப்பு நிதியேற்பாடு முழுமையாக செலவிடப்படாமல் இருந்தது. இதன் விளைவாக, குறைநிரப்பு நிதியேற்பாடுகளில் இருந்து மீளாய்வாண்டில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட கொள்வனவு நடவடிக்கைகள் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திறந்த சந்தையில் உயர் அரிசி விலை, விவசாயிகளுக்கு களஞ்சியப்படுத்தி உலர்த்தும் வசதிகள் இல்லாமை மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தில் சேர்ந்துகொள்வதற்கு தகுதியான நெல் ஆலைகள் இல்லாத காரணத்தால் இந்த நிதியேற்பாடு செலவிடப்படாமல் உள்ளது. | பெறப்பட்ட நிதியேற்பாடுகளில் இருந்து அதிகபட்ச நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட மூலதன பாதீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 14 துறைகளுக்கு ரூபா 41.53 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், அனைத்துத் துறைகளுக்கும் முன்னுரிமை அடிப்படையில் நிதியேற்பாடு ஒதுக்கப்படாமல் பதிவு செய்யப்பட்ட முன்பள்ளிகள், ஞாயிறு படசாலைகள், கலாச்சார நிலையங்களிற்கு பொருட்களை வழங்குவதற்காக அமுல்ப்படுத்தப்பட்ட 240 செயற்திட்டங்களுக்காக ரூபா 13.07 மில்லியன் மற்றும் இளைஞர்கள் மற்றும் பெண்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான பொருட்களை வழங்குவதற்காக அமுல்ப்படுத்தப்பட்ட 103 செயற்திட்டங்களுக்காக ரூபா 15.32 மில்லியன் வீதம் மொத்தம் ரூபா 28.39 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. ஏனைய 12 துறைகளுக்காக அமுல்ப்படுத்தப்பட்ட 138 செயற்திட்டங்களுக்காக ரூபா 13.14 மில்லியன் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. ஆனால் 2021 சனவரி 11 ஆம் திகதிய எம்எவ்என்பிடி/07/2021 ஆம் இலக்க நிதி அமைச்சின் கடிதத்தின் 2.4 ஆம் பந்தியின் பிரகாரம் பிரதேச செயலகத்தில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கை, வறுமை மற்றும் நில அளவு அடிப்படையில் நியாயமான முறையில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டக் கட்டுநிதி வழங்கல் மற்றும் பங்கீடு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மாவட்ட செயலகம் அவ்வாறு மேற்கொண்டிருக்கவில்லை. | பாராளுமன்ற உறுப்பினர்களால் பரிந்துரைக்கப்பட்ட செயற்திட்ட முன்மொழிவுகள், சாத்தியவள ஆய்வுடன் அமைச்சின் அங்கீகாரம் மற்றும் நிதியேற்பாடுகளைப் பெற்ற பின்னர் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளன. | 2021 சனவரி 11 ஆம் திகதிய எம்எவ்என்பிடி/07/2021 ஆம் இலக்க நிதி அமைச்சின் கடிதத்தின் 2.4 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திருகோணமலை மாவட்டத்தின் பிரதேச செயலகங்களிலுள்ள 33 கிராம சக்தி ஜனதா சமிதிகளுக்கு 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிராம சக்தி ஜனதா இயக்கத்தின்" கீழ் கிராமிய பொருளாதாரத்தை தரமுயர்த்துவதற்காக ரூபா 52.19 மில்லியன் வழங்கப்பட்ட போதிலும் இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்ப்படுத்தப்படாததால் விரும்பிய நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு அரசாங்க நிதியானது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய சமூக அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக விழிப்புணர்வு எதுவும் கிடைக்கப்பெறாத காரணத்தினால் இந்தப் பணம் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. | பெறப்பட்ட நிதியேற்பாடுகளிலிருந்து அதிகபட்ச நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.3 பிரதான செயற்பாடுகளிற்கு முரணான நடவடிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருள் கைத்தொழில் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் "2021 வீடமைப்பு செயற்திட்டம்" தொடர்பாக குச்சவெளி, கிண்ணியா, மொறவெவ, கந்தளாய், கோமரன்கடவல மற்றும் சேருவில ஆகிய 5 பிரதேச செயலக பிரிவுகளிலிருந்து மீள்குடியேற்றத் திட்டத்தின் 2.3 ஆம் பிரிவின் பிரகாரம் மீள்குடியேற்றத்திற்காக 29 கிராம உத்தியோகத்தர் பிரதேசங்கள் இனங்காணப்பட்ட போதிலும் 2021 ஆம் ஆண்டிற்கான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் வீடமைப்பு செயற்திட்டத்தின் கீழ் "திருகோணமலை மாவட்டத்தின் மீள்குடியேற்றத் திட்டத்தில்" உள்ளடக்கப்படாத 97 கிராம உத்தியோகத்தர் பிரதேசங்களிற்கு ரூபா 600,000 | கிழக்கு மாகாண பிரதம செயலாளர் மற்றும் திருகோணமலை மாவட்ட செயலாளரின் மீள்குடியேற்ற திட்டத்தின் 2.3 ஆம் பிரிவின் பிரகாரம் 29 கிராம உத்தியோகத்தர் பிரதேசங்கள் மீள்குடியேற்றத்திற்காக இனங்காணப்பட்டிருந்த போதிலும் அமைச்சு செயலாளரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் குறித்த திட்டத்திற்கு மேலதிகமாக போரினால் போரினால் அழிக்கப்பட்ட 97 கிராம உத்தியோகத்தர் பிரதேசங்களை உள்ளடக்கி நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | "திருகோணமலை மாவட்டத்தின் மீள்குடியேற்றத் திட்டத்தில்" உள்ள 2.3 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

பெறுமதியான 142 வீடுகளுக்காகவும் ரூபா 1 மில்லியன் பெறுமதியான 142 வீடுகளுக்காகவும் ரூபா 227.20 மில்லியன் தொகை வழங்கப்பட்டது.

### 3.4 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடைந்துகொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சேருவில பிரதேச செயலகத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட ”செழிப்பான உற்பத்தி கிராமங்கள் செயற்திட்டம்” கோழிக்குஞ்சுகளை பகிர்ந்தளிப்பதற்கு ஏற்பாடு செய்திருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2.25 மில்லியன் கூட்டுமொத்தப் பெறுமதியான 2625 கோழிக்குஞ்சுகள் பகிர்ந்தளிக்கப்படாததுடன் தொடர்புடைய காசோலையும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததால் செயற்திட்டத்தின் நோக்கங்கள் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சம்பந்தப்பட்ட வழங்குநர் பல அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்குநராக செயற்படுவதால், உரிய நேரத்தில் வழங்குவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. | செயற்திட்டங்களை சரியாக திட்டமிட்டு செயற்படுத்த வேண்டும். |

### 3.5 எதிர்பார்க்கப்பட்ட விளைவு அடைந்துகொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சமுர்த்தி வதிவிட பொருளாதார நுண் நிதிய, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் “செழிப்பான உற்பத்திக் கிராமங்கள் - 2021” செயற்திட்டத்தின் கீழ் 4 பிரதேச செயலகங்களின் கீழ் நடாத்தப்பட்ட மாதிரி கணக்காய்வின் பிரகாரம் மீளாய்வாண்டில் ரூபா 16.34 மில்லியன் பெறுமதியான 13714 கால்நடைகள் 242 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட போதிலும் 164 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 2.84 மில்லியன் பெறுமதியான 3299 கால்நடைகள் இழக்கப்பட்டதன் காரணமாக இச் செயற்திட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட நோக்கம் உகந்த வகையில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | திருகோணமலை மாவட்டத்திற்கு வெளியில் இருந்து கொண்டு வரப்பட்ட இந்த விலங்குகள் 2021 ஆம் ஆண்டு மழைக்காலத்தில் போக்குவரத்து மற்றும் விநியோகம் காரணமாக பல விலங்குகள் தொற்று நோய்களால் பாதிக்கப்பட்டு இறந்துள்ளன. | செயற்திட்ட ஒதுக்கீடுகள் உகந்த வகையில் பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.6 பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் கீழ் ”விளையாட்டு மைதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2021” இல் கந்தளாய், பட்டனமும் சூழலும் மற்றும் கிண்ணியா பிரதேச செயலக பிரிவில் உள்ள 3 தேசிய பாடசாலைகளுக்கு ரூபா 9.83 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், பணிகள் மீளாய்வாண்டின் இறுதியளவில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன், கிண்ணியா பிரதேச செயலக பிரிவில் ரூபா 2.46 மில்லியன் கிரயத்தில் விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்கான செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. மாவட்டச் செயலகத்தின் ஒப்பந்த நிர்வாகச் செயற்பாடுகளின் வினைத்திறன் இன்மையினால் இந்த நிலைமை ஏற்பட்டது. | கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை, மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் ஒப்பந்ததாரர்கள் கொடுப்பனவு முறையை ஏற்காதமை காரணமாக நாடு பூட்டப்பட்டதிலிருந்து செயற்திட்டம் கைவிடப்பட்டது. | செயற்திட்டங்கள் முறையாக திட்டமிடப்பட்டு குறிப்பிட்ட கால எல்லைக்குள் வினைத்திறனாக செயற்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2021 இன் கீழ், பிரதேச செயலகங்களினால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய 222 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் வருடாந்த ஒதுக்கீடான ரூபா 338.9 மில்லியனில் ரூபா 18.26 மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. | விலை தளம்பல் மற்றும் கட்டுநிதியை பெற்றுக்கொள்வதில் காலதாமதம் ஆகிய காரணங்களால் திட்டத்தின் பிரகாரம் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியவில்லை. | -மேற்படி- |

### 3.7 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்க பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.1 மற்றும் 4.4 இன் பிரகாரம் ஒரே வகையான பெறுகை பிரிக்கப்படாமல் செய்யப்பட வேண்டும். மேலும், நியாயப்படுத்த முடியும் போது மாத்திரமே பெறுகை செயன்முறையை பிரித்து | மிகவும் வரையறுக்கப்பட்ட வழங்குநர்கள் காணப்படுதல், தற்போதுள்ள வழங்குநர்களின் மட்டுப்படுத்தப்பட்ட திறன் மற்றும் ஒரு பகுதிக்கு மாத்திரம் வழங்குவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட திறன் என்பன | அரசாங்க பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| தனித்தனியாக மேற்கொள்ள முடியும். எனினும் திருகோணமலை, பட்டனமும் சூழலும், கோமரன்கடவல மற்றும் சேருவில பிரதேச செயலகங்களில் ரூபா 13.72 மில்லியன் பெறுமதியான ஆடுகளை கொள்வனவு செய்வதற்கான கேள்விகளை கோரும் போது தொகுதி கட்டளை அடிப்படையில் கூறுவிலைகள் கோரப்பட்டுள்ளன. இதன் விளைவாக, மாவட்ட பெறுகை குழுவின் அதிகபட்ச வரம்பான ரூபா 1 மில்லியனை விஞ்சி ரூபா 3.72 மில்லியனுக்கு பெறுகை மேற்கொள்ளப்பட்டது. ஆகையால் போட்டி பெறுகை நன்மைகளைப் பெற முடியவில்லை. | காரணமாக தனியான பெறுகை பிரதேச மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |

**3.8 முகாமைத்துவ பலவினங்கள்**

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மொறவெவ பிரதேச செயலகத்தினால் ரூபா 3.64 மில்லியன் கிரயத்தில் 52 பயனாளிகளுக்கு கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருள் கைத்தொழில் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் கீழ் சுகாதார செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்திற்கான பயனாளிகளை மீள்குடியேற்ற கிராமங்களில் இருந்து மாத்திரம் தெரிவு செய்தல் என்ற அமைச்சின் அளவுகோலின் அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படாமல் மீள்குடியேற்றம் செய்யப்படாத கிராமங்களில் இருந்து 25 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு ரூபா 1.75 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | மொறவெவ பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 10 கிராம உத்தியோகத்தர் பிரதேசங்களில் அதிகளவான மக்கள் கிராமங்களை விட்டு வெளியேறி சிறு குழுக்களாக அவ்வப்போது வந்து செல்வதால் குறித்த மக்கள் குழுவிற்கு இந்த நன்மை வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 சனவரி 11 ஆம் திகதிய நிதி அமைச்சின் எம்எவ்என்பிடி/07/2021 ஆம் இலக்க கடிதத்தின் 2.4 ஆம் பந்தியின் பிரகாரம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை வழங்கி பகிர்ந்தளித்தல் பிரதேச செயலக பிரிவில் வசிக்கின்ற மக்களிற்கான வறுமை மற்றும் புவியியல் | நிதி அமைச்சின் எம்எவ்/என்பிடி/01/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் தொடரப்பட்டது. கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டவாறு 2021 சனவரி 11 ஆம் திகதிய நிதி அமைச்சின் | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் முறையாக பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருப்பிடத்தின் அடிப்படையில் நியாயமான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் ஒதுக்கப்பட்ட ரூபா 41.53 மில்லியன் தொகையில் ரூபா 40.61 மில்லியன் தொகை மாவட்ட செயலகத்திற்குரிய 11 பிரதேச செயலகங்கள் மூலம் மேற்படி ஏற்பாடுகளிற்கு எதிராக செலவிடப்பட்டுள்ளது. | எம்எவ்என்பிடி/07/2021 ஆம் இலக்க கடிதத்தின் 2.4 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (இ) | மீளாய்வாண்டிற்குரிய சமுர்த்தி மானிய அறிக்கையின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலக பகுதியில் வறுமையில் உள்ள சனத்தொகை 31,698 ஆக காணப்பட்ட போதிலும் சமுர்த்தி மானிய அறிக்கையின் பிரகாரம் சமுர்த்தி பெற்ற சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கை 60,402 ஆக காணப்பதுடன் இது கணக்காய்வின் போது கேள்விக்குறியாகியுள்ளது. இதன் விளைவாக, மீளாய்வாண்டில் சமுர்த்தி நலன்களிற்கு தகுதியில்லா 28,704 நபர்களுக்கு ரூபா 958.4 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. | செழிப்பான உற்பத்தி கிராம செயற்திட்டத்தின் பயனாளிகளைத் தெரிவு செய்வதில் மாவட்ட சமுர்த்தி அலுவலகம் தலையிடுகின்ற போதிலும் சமுர்த்தி மானியப் பயனாளிகளைத் தெரிவு செய்தல் பிரதேச செயலகம் மற்றும் அதற்குரிய அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படுகிறது. | செலவினங்களை மேற்கொள்ளும் போது சரியான அறிக்கைகள் மற்றும் தகவல்களின் அடிப்படையில் மாத்திரமே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் குறித்து அதிகாரிகள் போதுமான அளவு அறிந்திருக்காததுடன் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட்டிருக்காததால் மீளாய்வாண்டில் இலக்குகளின் அடைதல்களை மதிப்பீடு செய்ய முடியவில்லை. | மாவட்டத்தில் நிலைபேறான அபிவிருத்தி முன்னுரிமைகளை இனங்கண்டு செயற்படுத்துவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 5. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு சிரேஷ்ட நிலைக்கான 16 வெற்றிடங்கள், மூன்றாம் நிலைக்கான 26 வெற்றிடங்கள், இரண்டாம் நிலைக்கான 173 வெற்றிடங்கள் மற்றும் ஆரம்ப நிலைக்கான 42 வெற்றிடங்கள் உட்பட மொத்த வெற்றிடங்களின் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் பிரகாரம் வெற்றிடங்களை நிரப்புவதற்கான அறிவித்தல்கள் உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்கு தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றன. | அத்தியாவசிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு உடனடி கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எண்ணிக்கை 257 ஆகும். அதன் பிரகாரம் பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்டச் செயலகங்களில் 16 சிரேஷ்ட மட்ட வெற்றிடங்கள் காணப்படுவதால் நிறுவனத்தின் ஏனைய ஊழியர்களை நிறுவனத்தின் ”தூரநோக்கு மற்றும் பணிக்கூற்றை” நோக்கி வழிநடாத்துவதில் சிக்கல்கள் எழுந்ததுடன் தீர்மானமெடுக்கும் நிலையில் அதிக எண்ணிக்கையிலான ஊழியர் வெற்றிடங்கள் காணப்படுவதால் நிறுவனங்களின் செயலாற்றலை மோசமாக பாதித்தது. 241 மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலை ஊழியர் வெற்றிடங்கள் இருந்ததுடன் இந்த ஊழியர்கள் நிறுவனமொன்றின் செயற்பாட்டில் உள்ள ஊழியர்களாக இருப்பதால், அத்தகைய வெற்றிடங்கள் நிறுவன செயற்பாடுகளின் வினைத்திறன் மற்றும் செயற்திறனை மோசமாக பாதித்தன. | | |
| (ஆ) | மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக சேவையாற்றிய உத்தியோகத்தர்களுக்கு இடமாற்ற கொள்கை அமுல்படுத்தப்பட்டிருக்காதமையால் நகரை விட்டு வெகு தொலைவில் உள்ள பிரதேச செயலகங்களில் நீண்டகாலமாக இடமாற்றத்திற்காக காத்திருக்கும் உத்தியோகத்தர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. | பயிற்சி தேவைகள் மற்றும் அனைத்து உத்தியோகத்தர்களுக்குமான இடமாற்றம் என்பவற்றிற்கான திட்டத்தை முகாமைத்துவக் குழு தற்போது தயாரித்து வருகிறது. | 2001 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய 18/2001 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |